RIGHT TO INFORMATION ACT-2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை,** தேனாம்பேட்டை, சென்னை–18.
தொலைபேசி 24357580

**வழக்கு எண்.24860/விசாரணை/ 2009,**

**விசாரணை நாள் = 29–1–2010 (இராமநாதபுரம்)**

| | | |
|---|---|---|
| முன்னிலை | = | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி,<br>எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதார | = | திரு பி.எம். செந்தில்குமார், த/பெ. பி. முனியசாமி<br>15/93, நாடார் தெரு, சாயல்குடி அஞ்சல்<br>இராமநாதபுரம் மாவட்டம்–623 120 |
| பொது அதிகார அமைப்பு | = | பொதுத் தகவல் அலுவலர்<br>காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் (குற்றம்)<br>இராமநாதபுரம் |

========

இன்று (29.1.2010) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு பி.எம். செந்தில்குமார், பொது அதிகார அமைப்பின் சார்பில் இராமநாதபுரம் காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் (குற்றம்) திரு கே. சூரியபிரகாஷ் ஆகியோர் வந்திருந்தனர்.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் சட்டப் பிரிவு 6(1)ன் கீழ், மனுதாரர் 1.8.2009 அன்று பொதுத் தகவல் அலுவலர், காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம், இராமநாதபுரம் என்று முகவரியிட்டு, 17.2.2009 அன்று தான் சாயல்குடி காவல் நிலையத்தில் புகார் செய்த மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஏழு இனங்களுக்கு தகவல் வேண்டி விண்ணப்பித்திருந்தார். மனுதாரருக்கு 26.8.2009 அன்று தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளன. தகவல்கள் சரியாக இல்லையென்று தெரிவித்து, சட்டப் பிரிவு 19(1)ன் கீழ் மனுதாரர் 28.8.2009 அன்று மேல்முறையீட்டு அலுவலருக்கு முதல் மேல்முறையீடும், 1.10.2009 அன்று சட்டப் பிரிவு 19(3)ன் கீழ் இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடும் செய்ததன் அடிப்படையில், சட்டப் பிரிவு 18(3)ன் கீழ் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணையின்போது மனுதாரர் கோரிய ஏழு இனங்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மனுதாரர் இடையே விசாரிக்கப்பட்டன. விசாரணை

முடிவில் மனுதாரருக்கு இனங்கள் வாரியாக தகவல் அளிக்கப்படவில்லையென்றும், சரியான தகவல்கள் அளிக்கப்படவில்லையென்றும் இவ்வாணையம் கருதுகிறது. இந்நிலையில், மனுதாரருக்கு அவர் 1.8.2009 நாளிட்ட மனுவில் கோரிய ஏழு இனங்களுக்கான தகவல்களை இனங்கள் வாரியாக, சரியான, முழுமையான அரசு ஆவணங்களில் உள்ளபடி தகவல்களை 3.2.2010க்குள் மனுதாரருக்கு அனுப்பி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல்களின் நகலையும், இவ்வாணையத்திற்கு 8.2.2010க்குள் அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

மாநில தகவல் ஆணையம்

ஒப்புதல் பெறப்பட்ட
நாள் 11 பிப்ரவரி, 2010.

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.24860/2009**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்,**
**காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் (குற்றம்)**
**இராமநாதபுரம்**

**வழக்கு எண்.24860/2009**
**பெறுநர்**
**திரு பி.எம். செந்தில்குமார்**
**த/பெ. பி. முனியசாமி,**
**15/93, நாடார் தெரு,**
**சாயல்குடி அஞ்சல்**
**இராமநாதபுரம் மாவட்டம்–623 120**